உ
சிவ சிவ

# அன்புநெறி

மலர் - 10 யூன் 2006 இதழ் - 11

$1.00







திருவாத வூரிறையைத்
தித்திக்குந் தீந்தமிழின்
உருவாய வாசகமும் கோவையுஞ்
சொல் உயர்குருவை
மருவாய நெறிபுகலும்
மாணிக்க வாசகனை
ஒருபோதும் மறவாமல்
உளத்திருத்தி வழுத்திடுவாம்.

திருப்பபுகலி மறையவனைச்
சிவஞானத் தமிர்தருந்தி
உருத்துவரும் அமணரிருள்
ஒருங்ககற்றும் இளங்கதிரைக்
கருத்தகலாத் திருஞான
சம்பந்தக் கலைமணியை
இருத்தியகத்து என்றென்றும்
இடர் களைந்து வழுத்தி
நிற்பாம்.

- பண்டிதர் திரு. க. மயில்வாகனனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

DENTAL OFFICE (OPEN 7 DAYS A WEEK)

BRACE FOR A GREAT SMILE

**உங்கள் சேவை கருதி இரு இடங்களில் வாரத்தின் ஏழு நாட்களும் பல் வைத்திய நிபுணர்களின் சேவைகள்.**

## Dr. M. Illango

B. D. S, D orth (Oslo)
General Practioner Mainly Orthodontics

## Dr. S. Raveendran

B.D. S., M.S, F. D. S. R. C. S. (Eng.)
General Practioner

## Dr. Janaki Illango

B. D. S. Family Dentistry

**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. E., # 303
Scarborough, ON
**(416) 292 -7004**

**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

## நூல்கள் விற்பனைக்கு!

**பண்டிதமணி இலக்கிய கலாநிதி மு. கந்தையா**

அவர்கள் எழுதிய

1. **சித்தாந்தச் செழும் புதையல்கள்**

என்ற நூலும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்

2. **Saiva Siddhantha The Treasure Trove**

Translated by
**Siddhantaratnam Dr. K. Ganesalingam**

என்ற நூலும் விற்பனைக்கு உள்ளன. ஒவ்வொன்றும் ஐந்து டொலராகும் ($5. 00), அஞ்சல் பொதிச் செலவு தனியாகும்.

தொடர்புகளுக்கு: Saiva Sidhdhantha Manram, Canada
1008-50 Elm Dr. E., Mississauga. Ontario L5A 3X2, Canada
Email: saivamanram@gmail.com (Tel.: 905-566-4822)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவ சிவ

# அன்புநெறி

| மலர் 10 | விய வைகாசி - ஆனி, யூன் 2006<br>திருவள்ளுவர் ஆண்டு - 2037 | இதழ் 11 |
|---|---|---|

**பொருளடக்கம்** **பக்கம்**

1. ஆசிரியர் தலைப்பு . . . . . . 2
2. ஞானசம்பந்தக் கும்மி.. . . . . . 6
3. ஆரொடு நோகேன் ஆர்க்கு எடுத்து உரைக்கேன். 7
4. சிவானுபூதிச் செந்நெறி.. . . . . 11
5. கந்தபுராணச் சிந்தனைகள். . . . . 15
6. திருமந்திரம் என்னும் அருள்விருந்து . . 18
7. சைவசமயக் களஞ்சியம். . . . . 21
8. நீத்தார் நினைவு . . . . . . . 22

**சிறுவர் பகுதி**

9. மாணவருக்கு . . . . . . . 26
10. மருகலில் புரிந்த மாயம் . . . . 28
11. மன்றத்தில் நிகழ்ந்தவை .. . பின்பக்க அட்டையில்

**ஆசிரியர் :** திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்
**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா

## அன்புநெறி சந்தா விபரம்

தனிப்பிரதி $1.00, வருடச் சந்தா (12 இதழ்கள்) $10.00.
(நேரில் பெறுவோருக்கு)

**அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-**

**கனடா:** CAN $25.00
**அமெரிக்கா:** US $25.00
**ஏனைய நாடுகள்:** US $30.00/GBP 20.00
AUS $40.00

**தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada
**1008-50 Elm Dr. E. , Mississauga, ON L5A 3X2 Canada**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்த மன்றம், கனடா
Saiva Sidhdhantha Manram, Canada 1008-50 Elm Dr. E.,
Mississauga, ON L5A 3X2 Canada (905) 566-4822

# இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே

இவ் வருட யூன் மாதத்தில் சமயகுரவர்களில் இருவராகிய திருஞானசம்பந்தர் சுவாமிகளினதும் மாணிக்கவாசக சுவாமிகளினதும் குருபூசைகள் வருகின்றன. அவர்கள் இறைவனை பாடிப் பரவிய பாங்கினைச் சிந்திப்போமாக.

வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க அவதரித்த, திருஞானசம்பந்தப் பெருமான் பிறந்து மொழி பயின்ற நாள் முதலாக இறைவனை நாளும் தமிழ்ப் பாமாலைகளால் போற்றித் துதித்தவர். இறைவனை ஏற்றிப் போற்றி வாழ்த்திப் பரவும் பாமாலைகளைத் திருநெறிய தமிழாகக் கொள்கிறார் திருஞானசம்பந்தர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது நமச்சிவாய என்னும் மந்திரம் என்ற விந்தையை உலகுக்கு எடுத்துக் காட்டியவர். எனவே பாடித் தொழுதேத்தும் பான்மையால் பெற்ற இன்பம் உணர்ந்த நிலையில் பாடித் தொழுவதே தம் கடனாகக் காட்டுகின்றார்.

இம்மைத் துன்பங்கள் கழியவும், மறுமை இன்பம் வாய்க்கவுமே இறைவனைப் பரவ வேண்டும் என்கிறார்.

"பரமனைப் பாடிட பாவமாயின தீரப் பனித்திடும்" என்றும்
"மறை வளரும் பொருளாயினானை மனத்தால் நினைந் தேத்த
நிறை வளரும் புகழெய்தும் வாதை நினையா வினை போமே"
என்றும்
"மணஞ்சேரிப் பதியினைப் பாட வல்லார் வினை பாறுமே"
என்றும்
"கண்கள் ஆர்தரக் கண்டு நங்–கடிக்குளத்துறைதரு கற்பகத்தைப்
பண்கள் ஆர்தரப் பாடுவார் கேடிலர் பழியிலர் புகழாமே"
என்றும்
"பாடியாடும் மெய்ப்பத்தர்கட்கருள் செயும் முத்தினைப் பவளத்தை"
என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டினாற் பணிந் தேத்திட வல்லவர்
ஓட்டினார் வினை ஒல்லையே"

என்றும் ஆங்காங்கு அவர் சுட்டிப் பாடுதல் காணலாம்.

"ஆடும் அவிர் சடையான் அவன்மேய ஆரூரைச் சென்று
பாடுதல், கைதொழுதல், பணிதல், கருமமே"

என்றும்

"இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"

என்றும் உறுதியாகக் கூறுகின்றார்.

இறைவனை எவ்வாறு பாடவேண்டும், பரவவேண்டும், அவன் குணங்களை, தெரிந்து பாடவேண்டுமா? பொருள் கூட்டிப் பாடவேண்டுமா? வேண்டாம் அன்பால் நினைந்து பாடினால் போதும். பொருளறிவாராச் சொற்களானாலும், அவன் ஏற்று மகிழ்வான் என்பதைத் திருவைகாவூர் பதிகத்தில் கூறுகின்றார்.

"கோழைமிட றாககவி கோளும்இல வாகஇசை கூடுவகையால்
ஏழையடி யாரவர்கள் யாவை சொன சொல் மகிழும் ஈசன்"

ஏழை அடியவர்கள் சொல்லும் எல்லாவற்றையும் மகிழ்ந்து ஏற்றுக் கொள்வான் இறைவன். குழந்தைகளின் பொருள் அறிவாரா மழலைச் சொற்களைப் பெற்றோர் மகிழ்ந்து சுவைப்பது போல, பொருளில்லாக் கவிதையை, இசையல்லா இசையில் பாடினாலும், இறைவன் ஏற்று மகிழ்வான் என்கிறார்.

மாணிக்கவாசக சுவாமிகள் தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூரில் அவதரித்தவர். ஞானநெறியில் நின்று, அறிவால் சிவமாக விளங்கியவர். திருவருள் வழி நின்று, அவர் அருளிய பனுவல்கள் திருவாசகமும் திருக்கோவையாருமாகும். உருக்கமே வடிவான நூல் திருவாசகம் ஆகும். பாமாலைகளில் தேன் துளிகளால் நிறையப் பெற்ற திருவாசகத்தை அருளிய மாணிக்கவாசக சுவாமிகள் உருகிய உள்ளன்பால் நாளும் இறைவனைப் போற்றி வழிபட்டவர். சம்பந்தப்பெருமான் கிளிகளை அழைத்து இறைவன் புகழைப் பாடுமாறு வேண்டுகிறார். இவர் கன்னிப் பெண்களைக் குளித்து மகிழும் போதும் இறைவனைப் பாடித்துதிக்க வேண்டுகிறார். தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற வேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியே எல்லோரையும் பாடித் துதிக்க அழைக்கின்றார்.

"மொய்யார் தடம்பொய்கை புக்கு முகெரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி"

"சீதப் புனல் பாடிச் சிற்றம்பலம் பாடி"

"நங்கள் பெருமானைப் பாடி நலந் திகழப்
பங்கையப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்"

இவ்வாறே பொற்சுண்ணம் இடிக்கும் போதும், தெள்ளேணம் கொட்டும் போதும் பொன்னூசல் ஆடும் போதும், அம்மானைப் பாடும் போதும் இறைவனைப் பாடிக் கொண்டே இருக்க வேண்டும் என்கிறார். அவருடைய ஆழ்ந்த விருப்பம் இறைவனைப் பாடிப் பரவுவதேயாகும். இதனை,

"பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்து உருகி நெக்கு நெக்கு
ஆடவேண்டும் நான் போற்றி."

என்னும் வரிகளால் தெளிவாக நாம் உணரலாம்.

சிவபுராணத்தில்

"ஈசன் அடி போற்றி எந்தையடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி"

என்று அவனைப் போற்றி அழைத்து,

"சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்"

என்று சிவபுராண நோக்கத்தை விவரித்து,

"எண்ணிறந்த எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்"

என்று அவன் அளப்பருந் தன்மையை வியந்து,

"ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே"

என்று பரவி நிற்கின்ற தன்மையை நாம் உணரலாம். சிவபுராணத்தின் முடிப்பும், அதன் பயனும் இறைவனைப் பாடிப் பரவுவதால் வரும் நன்மையை விவரிப்பதாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து."

சிவகதியால் சிவபுரத்தை அடைந்து மகிழ எளிய வழியைக் காட்டுகிறார் மாணிக்கவாசகர். இறைவனை வழிபடும் முறைகளில் சிறந்தது, அவனை உள்ளம் உருகி, நாவாரப் பாடிப் பரவுவதே என உணர்த்துகிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

**ஆசிரியர் தி. வி.**

கனடா சைவ சித்தாந்த மன்றம்
சைவசமயகுரவர் பாடசாலை,
**அன்புநெறி** சஞ்சிகை
என்பனவற்றின்

## பத்தாண்டு நிறைவு விழா
## திருவருட்செல்வர் விழா ~ 2006

**நாள்:**: ஆகஸ்ட் 13, 2006 ஞாயிற்றுக்கிழமை
**காலம்:** காலை 9:00 – மாலை 5:30 மணி வரை
**இடம்:** றிச்மண்ட்ஹில் இந்து ஆலய திருமண மண்டபம்
**நிகழ்ச்சிகள்**:

கருத்தரங்கு, சொற்பொழிவுகள்,
மன்ற மாணவர்களது பேச்சுகள், திருமுறை ஓதல்,
பண்ணிசை, என்பனவும்,
கலைநிகழ்ச்சிகளாக நடனம், நாட்டிய நாடகம்,
நாடகம் வாத்திய இசை என்பனவும் இடம்பெறும்.

யூலை 21, 2006 இல் நடைபெறும் சைவசமய
அறிவுத் தேர்வுப் பரீட்சையில் சித்தி
அடைவோருக்கு விழாவில்
பரிசில்கள், சான்றிதழ்கள் அளிக்கப்படும்.

**அனைவரும் திரண்டு வருக!.**
**குருவருளும், திருவருளும் பெறுக!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானசம்பந்தக் கும்மி

(கலாபூஷண கவிமாமணி மகாவித்துவான்
பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணிஐயர்)

தேவாரம் பாடியே தீந்தமிழ் வளர்த்த
தெய்வக் குழந்தையைப் போற்றுங்கடி
பாவாரம் பாடியே பரமேசன் உமையவள்
பாதத்தில் சூட்டினான் கும்மியடி

மோனத் தமிழ் தந்த மோகனலாவண்யன்
ஞான சம்பந்தனை வாழ்த்துங்கடி
தேனமுதாய் தமிழ்த் தேவாரம் தந்தானைத்
தையலரே கும்மி கொட்டுங்கடி

தங்கக் கிண்ணத்திலே தாயவள் ஞானப்பால்
தந்த பாலகனை ஏத்துங்கடி
சங்கத் தமிழிலே சைவத்தை வளர்த்த
சம்பந்தனைப் போற்றிக் கும்மியடி

தோணியப்பர் உமை தோன்றி விடையிலே
தெய்வீகக் காட்சி கொடுத்தாரடி
ஆணிப்பொன் பாடல்கள் ஆனந்தமாய்ப் பாடி
அழகாகத் தந்தானைத் துதியுங்கடி

பூம்பாவைப் பெண்ணின் எலும்புகள் தன்னையே
பொற்குடத்தில் கண்ட சம்பந்தன்
தாம்பாடிப் பாவைக்கு உயிர் கொடுத் தெழுப்பி
தமிழை உயர்த்தினான் மயிலையிலே.

நாவுக்கரசரும் பல்லக்கில் சுமந்த
ஞானசம்பந்தனை பாருங்கடி
பாவுக்கரசனாம் பாலகன் சம்பந்தன்
பாவையரே கும்மி கொட்டுங்கடி

மங்களம் பாடியே மங்கையர் கூடியே
மழலைச் சம்பந்தனைப் போற்றிடுவோம்
எங்கணும் இன்பமே பொங்கவேணும் என்று
சம்பந்தன் கும்மிகள் கொட்டிடுவோம்.

– முற்றும் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரொடு நோகேன் ஆர்க்கு எடுத்து உரைக்கேன்

(ஆழ்கடலான் முருகவே பரமநாதன்)

சைவ நெறியோடும் அதை அநுட்டிக்கும் சமயிகளோடும் நிரந்தர அணுக்கமுடைய தோத்திரப் பாராயணப் பனுவல் திருவாசகம். இதைப் பிற மதத்தினரும் பயன்படுத்துவர். எங்கள் மூதாதையர் முன் தலைமுறையினரின் நாவில் தெரிந்தெடுத்த சில திருவாசகங்கள் தவழும். அவர்களும் பாடிப் பரவசமாகி எம்மையும் அவ்வழியிலே ஆற்றுப்படுத்துவர். இன்று நினைவு மலர்களில் ஊடகம் மாறி ஆங்கிலத்திலே பதிவு செய்வதால் மொழியையும் இழந்து அதன் சுவை உணர்வுகளையும் உருக்கத்தையும் இழப்பர். "மெய்தான் அரும்பி, கடையவனேனை, இரும்புதரு மனத்தேனை, அம்மையே அப்பா, பால் நினைந்தூட்டும் தாயினும், தந்ததுன்தன்னை, உடையாள் உன்தன் நடுவிருக்கும்" எனத் துவங்கும் வாசகங்களைப் படிக்கும்போது பக்தி நிலையை ஆலயங்களிற் காண்போம். அப்படி வாலாயமான ஒரு பா இது.

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

நோ—இன்மை, ஓரெழுத்து, சிதைவு, துக்கம், துன்பம், கவல், பலவீனம், வியாதி, வலி, நோய், நோக்காடு நோதல்—கேடு, துன்புறல், நோயுறல், பெலவீனம், வறுமை, நோப்படுதல், காயப்படுதல், விதனப்படுதல். இந்த நோ ஒரு கனதியான திடப் பொருள் நம் உடலை உறுத்தும் போதும் தடியால், தண்டால், இரும்பால் கல்லால் அடிக்கும் போதும் உடம்பில் உட்காயமாகவும், வெளிப் புண்ணாகவும் ஏற்பட நாம் வேதனைப்படும் நிலை, நோ. நோவு என்ற சொற்களால் வெளிப்படுத்தப்படும். இஃதே போன்று மனத்தாக்கங்கள் பலவாம். மனம் நொந்து போதல் மனித இயல்பு. நெஞ்சு நோ இருந்தால் இருதயத் தாக்கத்தின் அறிகுறி என்பர் மருத்துவர். மன அழுத்தங்களால் மனம் வாடலும் நோவுதான். வெளி வீக்கம். உட்காயம் ஊமைக்காயம் என்பவற்றிற்கு வெந்நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தணம் கொடுப்பது ஒரு மருத்துவம். மனக் காயம் தெரியாதது. இந்த மன நோக்காட்டை ஆற்றவும் ஔடதங்கள் உண்டு. இன்று மனோவியல் நிபுணர்கள் அத்துறையில் வைத்தியம் பார்ப்பர். நொந்து சுமந்து பெற்று, நோகாமல் ஏந்தி முலை தந்து எனத் தாய்மையின் மகத்துவத்தைப் பேசுகிறார் பட்டினத்தடிகள். நோயுற்றுத் தளராமல், நொந்து மனம் வாடாமல், பாயிற் கிடவாமல் பாவியேன் காயத்தை ஓர் நொடிக்குள் நீக்கி ஒண்போகன ஐயா நின் சீரடிக்குள் வைப்பாயென சிதம்பர சுவாமிகள் பேரூர் (சமரபுரி) முருகனை வேண்டுகிறார். இதே பாவத்தில் எழுந்த வாசகம்தான் "பாரொடு விண்ணாய்" என்ற திருப்பாடல்.

இத்திருப்பாட்டிலே திருவாரூர்ச் செழுமறை முனிவர் எப்பேர்ப்பட்ட பெருமகனார், ஆரொடு நோகேன், ஆர்க்கெடுத் துரைக்கேன் எனத் தன் மனோ நிலையைப் பேசுகின்றார். சாதாரணமான நமக்கும் இது சாலும். (பொருந்தும்) ஒரு துன்பம் உறும் வேளையில், நம் மனத்தாக்கத்தை, நம்மோடு உற்றாய்மை யானவர்கட்குச் சொல்லி ஆறுதல் ஒரு வழி. எவராலும் தீராத தீர்க்க முடியாத மனப் பாரத்தை, மன நோக்காட்டை, தாக்கத்தைக் கவலையை எல்லாம் வல்ல தெய்வத்திடம் முறையிடுவது ஒரு சிறந்த வழி. மாணிக்கவாசகர் என்ன எல்லா அருளாளர்களும் இந்த மார்க்கத்தையே கையாண்டு துக்க நிவர்த்தி அடைந்துள்ளனர். அவை பாடாமல் இருக்கமுடியாமல் எழுந்த அருட்கவிகள், இறைவன் உந்த இவர்கள் பாடியவை. (நால்வர், பட்டினத்தார், வள்ளலார், தாயுமானவர், அருணகிரியார் போன்ற பலர்). சற்று வித்தியாசமான பார்வையில் மணிமொழியார் இப்பாசுரம் பாடியுள்ளார். "ஆரொடு நோகேன், "ஆர்க்கெடுத்துரைக்கேன்" என்ற தொடர் நெஞ்சைப் பிழிந்து எழுந்த நோக்காட்டு வெளிப்பாடு. படிப்பவர்களையும் கரைக்கும் . முதலிலே சுவாமிகள் தன்னை ஆளும் தலைவனின் பெருமையைப் பேசுகின்றார். பேசிப்பின் தன்முறைப்பாட்டை வெளியிடுகிறார்.

பாரொடு விண்ணாய் பரந்த எம்பரன் – இறைவன் எங்கும் தங்குகிறவன். அடியார்க்கு நல்லார். இந்த மண்ணும் விண்ணும் நிறைந்து நிற்கிறான் எம்பெருமான் என்கிறார் வாதபூரீசர். அவர் தந்த திருவருட் குறிப்பில் இறை தத்துவம் பலபட எடுத்தாளப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க" –திருவண்டப்பகுதி 43

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி"
சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
"நீரிடை நான்காய் நிறைந்தாய் போற்றி"
சுவை, ஒளி, ஊறு, ஓசை
"தீயிடை மூன்றாயத் திகழ்ந்தாய் போற்றி"
ஓசை, ஊறு, ஒளி
"வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி"
(வளி–காற்று) ஓசை, ஊறு
"வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"
(வெளி–ஆகாயம்) ஓசை(சத்தம்)
–போற்றித் திருஅகவல் 137–141

"ஈசனே நீ அல்லதில்லை இங்கும் அங்கும் என்பதும்
பேசினேன் ஓர் பேதமின்னை பேதையேன்" –திருச்சதகம் 78

"ஒன்றுநீ யல்லை அன்றி ஒன்றில்லை" –கோயில் திருப்பதிகம் 7

"நிரந்த ஆகாயம், நீர், நிலம், தீ, கால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்தது ஓர் உருவே! . . . " –கோயில் திருப்பதிகம் 6

மணிவாசகரின் வாக்காக அமைந்த அகச்சான்றைப் பார்த்தோம். இவ்வண்ணமே பிறர் வாக்காயும் சில காண்பாம்.

அங்கு இங்கு என்னாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது – தாயுமானவர்

பாரவன் காண் விசும்பவன் காண் பவ்வந் தான்காண்
பனிவரைகள் இரவினொடு பகலாய் நின்ற
சீரவன்காண் திசையவன்காண் திசைகளெட்டுஞ்
செறிந்தவன்காண் சிறந்தடியார் சிந்தைசெய்யும்
பேரவன்காண் பேராயிரங்களேத்தும்
பெரியவன்காண் அரியவன்காண் பெற்றம் ஊர்ந்த
ஏரவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன்என் எண்ணத் தானே. –திருமுறை 6:97:10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவன் அல்லன்
ஓரூரன் அல்லன் ஓர்உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே
கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன்
என்றெழுதிக் காட்டொ ணாதே. – திருமுறை 6:97:10

உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு வியந்தஇந் நிலைமை
உணர்ந் துணர்ந் துணரினும் இறைநிலை உணர்வரி துயிர்காள்
உணர்ந் துணர்ந் துரைத்துரைத்தரியய னரனென்னு மிவரை
உணர்ந் துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே
– திருவாய்மொழி: 1:3:6

எங்கும் நிறைந்த பரம்பொருள் எல்லாம் வல்ல சிவப் பொருளொன்றே. இந்த இருப்பு இருந்தவாறென்னே திருவாசகம் காட்டுவது சிவப்பரம்பொருளையே.

இறைந்து கரந்து நிற்கும் இறை இருப்பு இருந்தவாறென்னே. ஒரு கொடி படர்ந்து சீவிக்க ஒரு கொழு கொம்பு தேவை. கொம்பரில்லாக் கொடி போல அலமந்தனன் கோமளமே என அவரே பகர்கிறார். ஆக உன்னையன்றி ஒரு பற்றுக் கோடு இல்லை என்கிறார் சுவாமிகள். “எனக்கு ஆதாரமாய்த் திகழும் நீ எனை ஆண்டு அருள் புரியாவிடின் நான் எங்கே போவேன்” என்ற ஆதங்கம் மேலிட “ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்” என்று முறையீடு செய்கிறார். நோவேன் உரைப்பேன் என்றும் பாடியிருக்கலாம். நோகேன், உரைக்கேன் என்ற பிரயோகங்கள் நீதான் தஞ்சம் என்பதை வெளிக்கொணரக் காணலாம். இந்த நோ இறைவன் நோவாக ஒத்த பாவத்திற் பேசப்படுகிறது எனலாம். அடியார் நொந்தால் ஆண்டவனுக்கு அந்த நோ ஏற்படும். பிரம்படிபட்ட போது நோகாத இயற்கையே இல்லை. இச்சம உணர்வில் சொல்ல வேண்டிய இடம் வேறேதுமில்லை. எனவே நீதான் என்பது தோன்றாத் துணை. நீயும் கைவிடுவாயேல் நான் உயிர் வாழ மாட்டேன் எனத் தன்னிலையை எடுத்துப் பேசி, சுவாமிகள் படிப்பவரையும் மனம் குழையச் செய்கிறார். இதை ஆயிரமாயிரம் முறை பாடி எம் துயர் களைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானுபூதிச் செந்நெறி

(கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள்)

மேல்நாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சி தலைசிறந்து விளங்குவதால் எமது நாட்டிற் பலர், அங்கு சமயசம்பந்தமான ஆராய்ச்சியில் மக்கள் ஆர்வங் கொள்வதில்லை எனக் கருதுவது வழக்கம். இது தவறான கருத்தாகும். இந்திய நாட்டில் எவ்விதம் பல ஞானிகளும், அடியார்களுந் தோன்றி மக்களுக்கு ஆத்மீகத்துறையிற் சிறந்த பணிகளை ஆற்றினார்களோ அவ்விதமே, மேல்நாட்டிலும் காலத்திற்குக் காலம், பல ஞானிகளும் அடியார்களுந் தோன்றி மக்களைக் கடவுள் நெறியில் நிலைநாட்டிச் சென்றுள்ளனர். மனித சமூகந் தோற்றிய காலந்தொடக்கம் சமயத்தை மக்கள் நல்வாழ்வுக்குச் சாதனமாகக் கொண்டு வாழ்ந்தனர். சமயக் கொள்கை இல்லாத சமூகம் உலகில் இல்லையென்றே கூறிவிடலாம்.

மேல்நாட்டு அறிஞர், அடியார்களது அநுபவங்களை ஆராய்ந்து அவற்றின் தன்மைகளை அறிய முயல்கின்றனர். இவ்வழியில் முதல் முதலாகச் சிறந்த ஆராய்ச்சி நூலை வெளியிட்ட பெருமை அமெரிக்க நாட்டு அறிஞர் வில்லியம் ஜேம்ஸ் என்பவருக்கே உரியதாகும். அவர் வெளியிட்ட பலவித சமய அநுபவங்கள் (Varieties of Religious Experience) என்னும் நூலே, இத்துறையிற் புதிய ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டியது. இவரைப் பின்பற்றிப் பலர் சிறந்த நூல்களை எழுதியுள்ளார்கள். இன்று "பேரின்ப அநுபவ மார்க்க"த் (Mysticism) தைப் பற்றிய ஆராய்ச்சி ஒரு சிறந்த அறிவுத்துறையாக மேல்நாட்டில் விளங்குகின்றது. கிறிஸ்தவ ஞானிகளதும், அடியார்களதும் அநுபவங்களைப் பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல்கள் அங்கு வெளிவந்துள்ளன. முஸ்லீம் அடியார்களின் அநுபவங்களைப் பற்றிய நூல்களும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. ஆனால், சைவசமய அடியார்களைப் பற்றி இக்காலமுறையில் எழுதப்பெற்ற ஒரு நூலாவது, ஆங்கிலத்தில் வெளிவரவில்லை. விபுலாநந்த அடிகள் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன், தாம் தமது பேராசிரியர் பதவியிலிருந்து விலகியவுடன் சைவ அடியார்களது அநுபவச் சிறப்புகளைத் தொகுத்து, ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதவேண்டுமெனக் கருதியிருந்தார். ஆனால் அவ்வெண்ணம் நிறைவேறாது விட்டது எமது தவக் குறைவேயாகும். இவ்வழியில் ஆங்கிலங் கற்ற சமயப் பற்றுடைய அறிஞர் பணியாற்ற முன்வருவது விரும்பத்தக்கதாகும். மேல் நாட்டிற் சமய அநுபவங்களைப் பெறும் மார்க்கத்தை (Mystic way) ஆராய்ந்து வரும் வீதத்தைப் பின்பற்றிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமய அநுபூதி மார்க்கத்தில் அமைந்துள்ள சாதனங்களை விளக்குவதே, இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**சமயம்**

சமயம் என்னும் சொல்லால் நாம் குறிக்கும் பொருள் யாது என்பதை முதற்கண் ஆராய்வாம். சமயம் என்பதன் பொருள் மார்க்கம் அல்லது வழி என்பதாம். விரும்பிய ஒரு பொருளைப் பெறுவதற்கு மக்கள் உபயோகிக்குஞ் சாதனம் அல்லது கருவியே மார்க்கமாகும். சமயத்தால் மனிதன் அடைய விரும்பும் பொருள் கடவுள் அல்லது பேரின்பநிலை. உலகப் பொருள்களுக்கும், நிலைகளுக்கும் அதீதமாக நிற்கும் அல்லது விளங்கும் பொருளே கடவுள் என்று சமய நூல்கள் கூறும். கால தேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்ட நிலையே பேரின்ப நிலையாகும். இந்நிலையை அடையும் மார்க்கமே பேரின்ப அநுபவ மார்க்கம், அல்லது சமயம் எனப்படும்.

சமயம் எனக் கூறும்பொழுது சமயத்தால் அடையும் அநுபவமும் அவ்வநுபவத்திற்குத் துணையாகிய புறப் பொருள்களும் ஒன்றாகக் கருதப்படுகின்றன. பசி வேறு, உணவு வேறு. உணவைப் பாகம் பண்ணும் உபகரணங்கள் வேறு, உணவினாற் பசி தீரும்பொழுது, ஏற்படுகின்ற இன்பநிலை வேறு. உண்ணுதல் எனக் கூறும்பொழுது, நாம் மேலே காட்டிய யாவும் அதனுடன் தொடர்பு பட்டிருப்பதைக் காண்போம். உணவையும் அதனை ஆக்குவதற்குத் துணையாகவுள்ள உபகரணங்களையும் எவரும் ஒன்றெனக் கூறுவதில்லை. உணவின் தன்மையும் உணவை ஆக்குவதற்கு வேண்டப்படும் உபகரணங்களும், காலத்திற்குக் காலம் மாறுதல் அடைகின்றன என்பது மக்கள் அநுபவம். உணவை விரும்பும் நிலையும் (பசியும்) உண்பதினால் ஏற்படும் இன்ப அநுபவமும் எப்பொழுதும் ஒரே தன்மைத்தாகவே விளங்குகின்றன.

இவ்வுதாரணத்தைச் சமயம் என்பதுடன் ஒப்பு நோக்கி ஆராய்வாம். பொதுவாகச் சமயம் எனக்கூறும்பொழுது பேரின்ப அநுபவ விருப்பம், அதை அடைவதற்குச் செய்யுந் தவம், தவ வாழ்க்கைக்குச் சாதனமாகவுள்ள ஆலயவழிபாடு முதலிய கிரியைகள், சமய வாழ்க்கையின் பயனாய் ஏற்படும் பேரின்பம் முதலிய யாவும் அச்சொல்லில் அடங்கி விளங்கும். இவற்றில் பேரின்ப அநுபவ விருப்பமும் பேரின்ப அநுபூதியால் எற்படும் பரமானந்தப் பேறும் நித்தியமான உண்மைகளாகும். மற்றையன யாவும், சாதனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனவை பற்றி, காலதேசத்திற்குள் அடங்கி மாறுந் தரத்தனவாகும். ஆகவே, சமயத்தால் நாம் அடையும் அநுபூதி வேறு, அதனைப் பெறுவதற்குத் துணையாக அமைந்துள்ள சாதனங்கள் வேறு. சமய அநுபூதியையுஞ் சமய சாதனங்களையும் ஒன்றாக மதிப்பதினாலே தான், உலகத்திற் சமயத்தின் பெயராற் சண்டைகளும் வாதங்களும் ஏற்படுகின்றன. பசி உள்ளவர்கள் எந்நாட்டவராயினும், அந்நாட்டிலே தமக்குப் பொருந்திய உணவை ஆக்கி உண்டு பசியைத் தீர்க்கலாம். அதுபோலவே, பேரின்பக் காதலுடையோர், எச் சமயத்திற் காணப்பட்ட போதிலும், அச்சமயத்தில் அமைந்துள்ள சாதனங்களை அநுட்டித்துப் பேரின்பப் பேற்றை அடையலாம், என்பதுவே சமரச ஞானிகள் கூறும் உண்மையாகும்.

"பலபல மதமு மீற்றி னொருவழிப் படலும் போலும்"

என்னும் சிவஞான சுவாமிகள் வாக்கு நாம் கூறுவதை வலியுறுத்தல் காண்க.

சமயத்தின் உண்மையான கருத்தும் நோக்கமும் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவதேயாயினும், மக்கள் அதனை அந்நோக்கோடு தான் அநுட்டிக்கின்றனரென நாம் கூறிக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றோம். ஏனெனில், இலௌகீக இன்ப நுகர்ச்சிகளுக்காகச் சமய சாதனங்களை உபயோகிக்கும் வழக்கங் காணப்படுவதால் என்க. திருக்கோயில் வழிபாடு, மூர்த்தி உபாசனை, விரதம் ஆகிய கிரியைகளை மக்கள் இரண்டு விதமான நோக்கத்தோடு செய்யலாம். சிவாநுபூதியை மாத்திரம் விரும்பிச் செய்வது ஒரு விதம், உலக வாழ்வில் இன்ப நுகர்ச்சி பெறுவதற்காகச் செய்வது மற்றொருவிதம். முன்னையது சிவபுண்ணியமாகும், பின்னையது பசுபுண்ணியமாகும். இவ்விரண்டிற்கும் ஆலய வழிபாடு முதலியன சாதனங்களாக அமைந்துள்ளன.

ஆலயத்திற்குச் சென்று வழிபடுவோரெல்லாம் சமய வாழ்வுடையோர் ஆவரென நாம் கருதுகின்றோம். அது தவறு. சிவாநுபூதியை விரும்பிச் சமயசாதனங்களை அநுட்டிப்பவர்களே உண்மைச் சமயிகளாவர். ஏனையோர் இலௌகீகர்கள் ஆவர். உலக இச்சைகளைப் பூர்த்தி பண்ணிக் கொள்ளும் நோக்குடன் ஆலயத்திற்குச் செல்வோரது உள்ளம் சமய வாழ்க்கைக்கு வேண்டப்படும் பண்பை அடைவதில்லை. மண், பொன், பெண் ஆகிய நலன்களைப் பெற்று வாழ்வதற்காக நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டால் அது சமய வாழ்வாகுமா? உலகப் பொருள்களை விரும்பி இறைவழிபாடு இயற்றும் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் பக்தி உடையோர் அல்லர். கடவுளிலும் பார்க்க உலகப் பொருள்களிலே தான் அவர்களுக்குப் பற்று அதிகம். எதைச் செய்தும் எவ்வழியில் வழிபட்டும் உலக சுகங்களைத் தேடிக் கொள்வதே அவர்கள் நோக்கம். சமயம் அவர்களின் உடம்பிலே தான் விளங்குமன்றி உள்ளத்தில் நிலைபெறுவதில்லை.

சமய நூல்களையும் அடியார் வரலாறுகளையும் ஆராயும் நோக்குடையோர், சமயத்தின் உண்மைக் கருத்தை நன்கறிதல் வேண்டும். ஆலயத்திற்குச் செல்வோர் உண்மைச் சமய நோக்கோடு தான் செல்கின்றாரெனின், இன்று எமது நாட்டில் எத்தனையோ சிவனடியார்கள் தோன்றி இருப்பார்கள் அன்றோ!

## அதிகாரித்துவம்

சமய சாதனங்களை அநுட்டிப்பதற்கு ஒருவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். எல்லாச் சமய நூல்களிலும் அதிகாரி இலக்கணம் கூறப்பட்டுள்ளது, நூல் செய்வோர் எவர் பொருட்டு அந்நூலைச் செய்கின்றார் எனக் கூறுதல் சைவசமய மரபாகும். சிவஞான சித்தியார் எவர்பொருட்டுச் செய்யப் பட்டதென அருணந்திசிவாச்சாரியார் பின்வரும் பாவில் விளக்குகிறார்.

"பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணுந்
தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன் மார்க்கர்
கண்டநூ லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றாம்.

சித்தியார் – சுப. பாயிர. 3

இப்பாவில் மக்களைச் சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதர் என மூன்று பிரிவாகப் பிரிக்கின்றார். முன்செய் தவவிசேடத்தாற் சாமுசித்தராய்ப் பிறந்து வீடு காதலிக்குஞ் சிவபத்தரை, இறைவன் தானே சிவகதியில் சேர்த்துவன். அவர்க்கு நூல் வேண்டியதில்லை; ஏனெனில், அவர்கள் உலக இன்பத்திற் பற்றுடையோராதலால். ஆகவே, இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்களாய், சத்திநிபாதமுடையோராய், நூல்வழியாலும், சாதனைவழியாலும் முத்திபெற விரும்பும் வைநயிகர்களுக்கே நூல் செய்யப்பட்டது என்பது அறியற்பாலது. நாம் இதனால் அறியக்கிடக்கும் உண்மை எதுவெனில், சத்திநிபாத நிலையடைந்து முத்தியில் இச்சைபெற்றுள்ள உருவரே சிவஞானசித்தியார் முதலிய ஞான சாத்திரங்களைக் கற்று, அதன்கண் கூறப்பட்டுள்ள சமய சாதனைகளைச் செய்ய உரிமையுடையோராவர் என்பதே. ஏனையோருக்கு அந்நூல் பயனளிக்காது.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணச் சிந்தனைகள்

(மட்டுவில் திரு. ஆ. நடராசா)

## 2. தவஞ்செய்த சூரபன்மன்

தவஞ்செய்து ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆட்சிபுரிய வரம்பெற்ற சூரபன்மன் தந்தை காசிபரை அடைந்து, அவரை வணங்கி தான் என்ன செய்ய வேண்டுமென வினவினான். தந்தை தன் மகனை அவனுக்கேற்ற பாடம் படிப்பிக்கக்கூடிய ஆசிரியரிடந்தானே அனுப்ப வேண்டும். காசிபர் சூரபன்மனைச் சுக்கிராச்சாரியாரிடஞ் செல்லும்படி கூறினார்.

சூரன் சுக்கிரனிடஞ் சென்றான். பாடம் ஆரம்பமானது. பதி, பசு, பாசம், என முப்பொருள் உண்டென்பது தவறு. பாவ புண்ணியம், மறுபிறப்பு, முத்தி என்பதெல்லாம் பொய். நீயே பிரமம் என மாயாவாத பாடம் நடைபெற்றது.

அடுத்த பாடம் ஆரம்பமானது. "பிரமமாகிய உன்னைக் கேட்க யார் இருக்கிறார்கள்? கொலை, களவு, காமம், வஞ்சனை முதலிய அனைத்தையும் நீ செய். அதனால் உனக்குத் தீங்கு வருமென்பது பொய். இவற்றைச் செய்யாவிட்டால், நீ விரும்பிய அனைத்தையும் பெற முடியாது. உனக்கு எவரும் அஞ்சார்" என உலோகாயதம் உபதேசிக்கப் பட்டது.

"கொலையோடு களவு காமம்
குறித்திடு வஞ்ச மெல்லாம்
நிலையெனப் புரிதியற்றால்
நினக்குமேல் வருந் தீதொன்றும்
இலையவை செய்தி டாயேல்
இறைவநீ விரும்பிற் றெல்லாம்
உலகிடை ஒருங்கு நன்னா . . ."

(சுக்கிரன் உபதேசப் படலம் 50)

சுக்கிரனிடம் உபதேசம் பெற்ற சூரபன்மன் திக்கு விசயஞ் செய்தான். ஆயிரத்தெட்டு அண்டங்களும் அவனது ஆட்சிக் குட்பட்டன. அவனது ஆட்சியில் அமரர் தாம் செய்த பாவத்தின் பயனை அநுபவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பிழைத்தவனுக்கு அறங் கூற்றாக மாறியது. சூரபன்மன் தன் படையையுஞ் சுற்றத்தையும் இழந்து, யுத்த களத்தில் தன்னந் தனியனாக நின்றான். அவன் முருகனின் சேவலும் மயிலுமாக வேண்டுமென வேண்டி முற்பிறப்பிற் செய்த தவம் பயனளிக்குங் காலம் வந்தது. முருகப் பெருமான் தன் விசுவ ரூபத்தைக் காட்டி, அதைக் காண்பதற்குரிய ஞானக் கண்ணையும் அவனுக்கு அருளினார்.

சூரபன்மன் விசுவ ரூபத்தைக் கண்டான். முருகப் பெருமான் அவனுக்குச் சிறிது நல்லுணர்வு நல்கினார். அவனது சினந் தணிந்தது. மெய்ம்மயிர் பொடித்தது. கண்ணீர் பெருகியது. என்பு உருகி அன்பு கசிந்தது.

"கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணந்திலேன் யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ"
(சூ. வ. ப 433)

என எண்ணினான். ( மஞ்சை – மயில், அயன் – பிரமா)

சிறிது நேரத்தில் எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற பேரெழிலில் ஈடுபட்ட அவனது சிந்தனை கலைந்தது.

முருகனுக்கு ஆளாகி வாழவேண்டுமென எண்ணிய எண்ணத்தை மானந் தடுத்தது. அவன் மீண்டும் போரிட்டான். சரணாகதி அடையவில்லை, இறுதிவரை உறுதியோடு போர் புரிந்தான். வேற்படை அவனது மார்பைப் பிளந்தது. பிளவுண்ட இரு கூறுகளும் சேவலும் மயிலுமாகி முருகன் திருமுன் சென்றன. முருகப்பெருமான் அருள் நோக்கஞ் செய்தார். மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டார்.

"தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்"
(சூ. வ. ப 496)

என்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

இப் பாடலில் வரும் "குமரவேள் திருமுன் உற்றால்" என்னுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொடரில் இடம் பெறும் உற்றால் என்னுஞ் சொல், "அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா" என்னுஞ் சொற்றொடரில் இடம்பெறும். முளைத்தால் என்னுஞ் சொல் தருவது போன்ற பொருள் தருகின்றது. உற்றால், முளைத்தால் என்னுஞ் சொற்களின் இறுதியில் இடம்பெறும் 'ஆல்' செயல் நிகழ்ச்சியின் அருமையை உணர்த்துகின்றது.

அத்தை சித்தப்பாவாக மாறுவதானால் அத்தை ஆணாக மாற வேண்டும். அவளுக்கு மீசை முளைக்க வேண்டும். மீசை முளைத்த அத்தையைச் சித்தப்பா என அழைப்பதற்கு அவனுடைய அண்ணனுக்கு பிள்ளை இருக்கவேண்டும். அண்ணனுக்குப் பிள்ளை இருந்தாலும் அப்பிள்ளை, அவனை முன்னர் அழைத்தது போலன்றிச் சித்தப்பாவென அழைக்க வேண்டும். இத்தகையதொரு நிகழ்ச்சி இதுவரை நிகழ்ந்ததில்லை. இவ்வாறு நிகழ்ந்தால் அது ஆச்சரியப்படக் கூடியதொரு நிகழ்ச்சியாகவே இருக்கும்.

அதுபோல், குமரவேள் திருமுன் உற்றால் என்பதில் வரும் உற்றால் என்னுஞ் சொல்லும் தீயவை புரிந்தோர் முருகன் திருமுன்புறுதல் அரிதென்பதையே உணர்த்துகின்றது.

தீயவை புரிந்தோர் முருகன் திருமுன்படைய முடியாதென்பதை முதலடியில் எடுத்துக்காட்டி, நல்லன செய்யும்படி சொல்லாமற் சொல்லுங் கச்சியப்பர், அடுத்த அடியில் தூயவராகி மேலைத் தொல்கதியடைவர் எனக்கூறி, எவராவது தூயவர் ஆகாமற் கதியடைய முடியாதென்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

(தூயவராதல்—சன்மார்க்கராதல்)

மாயையின் மகனாகித் தீயவை புரிந்த சூரபன்மனைக் குமரவேள் திருமுன் செல்லவைத்து, அவன் தூயவனாகிக் கதியடைந்ததை எடுத்துக் காட்டி, இன்னும் தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலை தொல்கதி அடைவரென்கை ஆயவுங் வேண்டுங் கொல்லோ? எனக் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் வினாவுகின்றார் எனக்கொண்டால், தீயவை புரிதல், குமரவேள் திருமுன்புறுதல், தூயவராதல், தொல்கதியடைதல் ஆகிய செயல்களெல்லாம் உயிரின் செயலாகவே கருதப்படும். முருகன் செயலற்றவனாகக் கருதப்படுவன்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 9 இன் தொடர்ச்சி........

# திருமந்திர அருள் விருந்து

(திருமதி செல்வநாயகி கனகசபை, ஓய்வுபெற்ற ஆசிரியை, புளோரிடா, அமெரிக்கா)

## கொல்லாமை

ஓர் உயிர் தனது பிராப்த வினையை அனுபவிக்கு முன் அவ்வுயிரை, அவ்வுயிரின் உடலிலிருந்து பிரிப்பது கொலை எனப்படும். அவ்வாறு ஒருவன் செய்வதற்குக் காரணம் அவனது சுயநலமும் அறிவின்மையுமாகும்.

கருவிலே திருவுடையவன் மாமனிதன். மனிதன் பேணுவது மானுடம். மானுடம் உயர்ந்தது. மானுடம் பேணும் நெறிகளில் தலையாய நெறி கொல்லாமை. நமது சைவசமய ஒழுக்கங்களில் முதன்மையானது கொல்லாமை. அதன் பின்தான் மற்றைய ஒழுக்கங்களும் அறங்களும். கொலையானது தீய செயல்கள் எல்லாவற்றிலும் மிகத் தீமையானது. கொலைஞர்கள் தீயருட் தீயர். மக்கள் மாக்களாகி, இராட்சச பிசாசுக் காட்டுமிராண்டிக் குணம் மனித உள்ளத்தில் குடி கொள்வதனாற்றான், கொலை எண்ணம் உண்டாகிறது.

கொலை செய்யும் பாதகன் தான் புத்திசாலித் தனமாய் நடக்கிறேன் என்று எண்ணுகிறான். ஆனால் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவனது பார்வையில் நின்றும் தப்ப முடியாது. எப்பொழுதாவது அந்தக் கர்ம பலனை அநுபவித்தே தீருவான். மறுமை இன்ப துன்பங்களை நம்பா விட்டாலும் நாம் செய்யும் நல்வினை தீவினை எல்லாம் திரும்பவும் நம்மிடமே நம் ஆயுட் காலத்திலேயே திரும்பவும் நம்மிடம் இன்ப துன்பங்களாக வந்து அடையும் என்பது உண்மையாகும். கொலை செய்து விட்டுத் தலை மறைவாககத் தண்டனைக்குத் தப்பி நிம்மதியாய் வாழ்ந்து செத்தவர் இல்லை. 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்கிறது பைபிள்–அது மட்டுமல்ல வயதான காலத்தில் திரும்பவும் வரும் ஒரு சேமிப்பு நிதியுமாகும். சாவுக்குப் பின் வரும் தீர்ப்பு இரண்டாம் விசாரணையில். ஆனால் முதலாம் விசாரணை நம் ஆயுட் காலத்திலேயே நடந்து விடுகிறது. கொலை முதலானவற்றைச் செய்யும் பாவிகளுக்கு அரசன் அன்றே தீர்ப்பளிப்பான். ஆனால் தெய்வம் என்றும் அவன் வருந்தும் படியான தீர்ப்பை அளித்துக் கொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை என்னும் கொடிய தொழில் இல்லாது ஒழிய வேண்டும். மக்கள் கொலை புரிந்து அழியாது இருக்க வேண்டும் என்னும் பெருங் கருணையினால் திருமூலர் தமது திருமந்திரம் என்னும் அருள் நூலில் கொல்லாமையை ஓர் அதிகாரமாகப் பாடியுள்ளார். அதில் வரும் ஒரு பாடல்

"கொல்லிடு குத்து என்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டி
செல்லிடு, நில் என்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே."

இதன் பொருள்–கொல், எறி, குத்து என்று கூறிய மாக்களை – என்றிவ்வாறு கூறிக் கொலை செய்யும் மிருகத்தனமான மக்களை வல்லடிக்காரர் – வல்லடி வழக்குப் பேசுவோர், வலிக்கயிற்றாற் கட்டி – பலமான கயிற்றால் கட்டியும், செல், விடு, நில் என்று, போ–நில், விடு என்று கூறியும், தீவாய் நரகிடை– நெருப்புப் பற்றி எரியும் கொடிய நரகத்தில், நில்லிடும் என்று – நெடுங்காலம் எரியும் நெருப்பில் நின்று கொள் என்று சொல்லி நிறுத்துவார் தாமே – நெடுங்காலம் நிற்கும்படியாக நிறுத்துவார்கள் என்பதாம்.

இப்பாடலால் கொலை கூடாதென்பதும் கொலைஞர்கள் மறுமையில் அநுபவிக்கும் துன்பமும் கூறப்படுகிறது. முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும் என்பதும், தாம் தாம் செய்த வினையைத் தாமே அனுபவிப்பார்கள் என்பதும் விளக்கப்படுகிறது. ஓர் உயிரைப் போக்கும்போது குத்து, பிடி, கொல் என்று மிருகத்தனமாகக் கூறும்போது, பின் தமக்கு ஏற்படப் போகும் மறுமைத் துன்பத்தை நினைத்தாயினும் கொலை புரியாதிருக்கும்படி கூறுகிறார்.

திருமூலரின் இன்னுமோர் திருமந்திரப் பாடல்

"பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் உயிர்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடும் உச்சியே."

இதன் பொருள்: பற்றாய நற்குரு – நமக்குப் பற்றுக்கோடாக இருக்கும் இறைவனின், பூசைக்கும் நன்மலர் – பூசைக்கு வேண்டப்படும் நல்ல பல இனப் பூக்களில், மற்றோர் உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லாமை - எந்தவொரு உயிரையும் கொல்லாதிருத்தலே, ஒண்மலர் - சிறந்த மலராகும். நற்றார் - நல்ல மலர் மாலை போன்ற மனமும் நடுக்கற்ற தீபமும் - காற்று முதலியவற்றால் அசையாத தீபம் போன்று புலன்கள் வழி அலையாத மனமும், உற்றாரும் ஆவி - உடையவர்களின் ஆன்மா, அமர்ந்திடம் உச்சியே - தங்குமிடம் மோட்சமாகும்.

பல இன நன் மலர்களை அருச்சித்து வழிபாடு செய்வதிலும் பார்க்கக் கொல்லாமை என்னும் விரதம் அனுட்டிக்கும் வழிபாடே சிறந்தது என்று அறிவுறுத்துகிறார்.

செம்பில் களிம்பு போல் உயிருடன் அனாதியாய் உள்ள ஆணவ மலத்தைக் கொல்லாமை எனும் விரதம் அழிக்க வல்லது; கருணையை வளர்க்க வல்லது. ஞானக் கண்ணைத் திறக்கச் செய்யும் அருளை வளர்க்கும், கொலைஞனைத் தேடி ஏனைய பாவச் செயல்களும் வந்து சூழும். ஒருவன் தான் அறச் செயல்கள் செய்ய வேண்டுமென விரும்புவானாயின் அவன் முதற் கை கொள்ள வேண்டியது கொல்லாமை எனும் அறம்.

- எல்லா அறங்களிலும் முதன்மையானது கொல்லாமை.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

என்கிறார் வள்ளுவர். கொல்லானைக் கூற்றுவன் அணுகான். இறைவனே அழைப்பார். என்றும் அழியாப் பேரின்பம் பெறுவான். நோயான உடம்புடன் வறிய வாழ்க்கையை அனுபவிப்போர் முற்பிறப்பில் உயிர்க்கொலை செய்தவராவர். தன்னுயிர் போக்க வேண்டி வந்தாலும் பிற உயிர்களுக்குத் தீங்கு இளையாது, கொலை முதலிய பாவச் செயல்களுக்குப் பதிலாக, கருணை, அன்பு, பக்தி வாய்மை ஆகிய நற்குணங்களைக் கைக்கொண்டு வாழ்ந்து மனிதப் பிறவியின் இலட்சியத்தைப் பெற ஒவ்வொருவரும் முயல வேண்டும். வாழ்க்கையின் அர்த்தம் புரிந்து கடமை உணர்ந்து இலட்சியம் உணர்ந்து வாழ வேண்டும்.

தொடரும்

> அறவினை யாது எனில் கொல்லாமை கோறல்
> பிறவினை எல்லாம் தரும். —குறள் 321

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி........

# சைவசமயக் களஞ்சியம்

## கோயில்:

65. சண்டேசுவரர் வழிபாட்டை எழுதுக.

சிவதரிசனப் பலன் சண்டேசுவரரைத் தரிசித்தால்தான் பூர்த்தியாகும். சிவாலயத்துள் மூலவரைத் தரிசித்த பின் வலமாக வந்து சண்டேசுவரர் சந்நிதி முன் சென்று – அவர் தியானத்தில் உள்ள பெருமானாதலின் – அவர் முன்பு மூன்று முறை கையால் மெதுவாகத் தாளமிட்டுத் தரிசனப் பலனைத் தருமாறு கைகூப்பி வேண்டி, சென்ற வழியே திரும்பி வரவேண்டும்.

(சண்டேசுவரரை முழுவலமாகச் சுற்றக்கூடாது)

இவருடைய வரலாறு திருத்தொண்டர்(பெரிய) புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

66. சண்டேசுவரர் திருமேனியின் பல பெயர்களை எழுதுக.

1. சிவாலயத்தில் உள்ள சண்டேசுவரரின் பெயர் த்வனிச்சண்டேஸ்வரர் (தொனிச் சண்டேசுவரர்)
2. முருகர் ஆலயத்திலுள்ள சண்டேசுவரர் பெயர் சுமித்ரசண்டேசுவரர்.
3. விநாயகர் ஆலயத்திலுள்ள சண்டேசுவரர் பெயர்–கும்பசண்டேசுவரர்.
4. சூரியன் ஆலயத்திலுள்ள சண்டேசுவரரின் பெயர்–தேஜஸ் சண்டேசுவரர்.
5. அம்பாள் ஆலயத்திலுள்ள சண்டிகேசுவரியின் பெயர்–யமுனா சண்டிகேஸ்வரி

67. சண்டேசுவரர் சந்நிதியில் செய்யத்தகாத செயல் யாது?

பண்டை நாளில் மக்கள் கோயிலுக்குப் போகும்போது தாங்கள் கொண்டு செல்லும் நிவேதனப் பொருள்களையும் விளக்கிடுவதற்கான எண்ணெய், நெய், திரி முதலியவற்றையும் சண்டேசுவரர் சந்நிதியில் வைத்திடுவர். ஆலய அர்ச்சகர்கள் அவற்றை எடுத்துப் பயன்படுத்திக் கொள்வர். இம்முறையில் அங்கு வைக்கப்பட்ட 'திரி' பழக்கம் நாளடைவில் பொருள் அறியாமல் மாறிப் போய், மக்கள் வேட்டி நூலை எடுத்துச் சண்டேசுவரர் மீது போடும் பழக்கமாகி மாறிவிட்டது.

இவ்வாறு அறியாமையால் சிலர் செய்யும் இத்தவறான பழக்கத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லித்தடுக்க வேண்டியது அனைவரின் பணியாகும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீத்தார் நினைவு**

## மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த மங்கை

(திருமதி சகிதேவி கந்தையா )

கண்ணியமும், இறை உணர்வும் நிறைந்த கற்றோர் உறையும் நல்ஊர் மயிலணி (சுன்னாகம்). இங்கு ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் நிகரில் நிலையில் பெருமையுற வாழ்ந்த முது பெரும் புலவர் **குமாரசாமிப் பிள்ளை** அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகம் போற்ற வாழ்ந்த பெருமைக்குரியவர். இவர் திருமகன் முத்துக்குமாரசாமி – கமலாம்பிகை தம்பதியினரின் மூத்த புதல்வி **மங்கையற்கரசி** 14–07–1932இல் பிறந்து பல்வேறு நிலைகளில் புகழ்பட வாழ்ந்து 23–05–2006இல் தன் பயனுறு வாழ்வைத் திடீரென பலர் மனம் துயருற நீத்து, எங்கும் நிறைந்த பரப்பிரமத்தின் பாதார விந்தத்தைப் பற்றினார்.

மங்கை என நண்பர்கள் அன்புடன் அழைக்கும் இவர் இராமநாதன் கல்லூரியின் சிறந்த மாணவி, திருச்சி (தமிழ்நாடு) Holy Cross பட்டதாரி. அராலிப் பாடசாலையில் தன் ஆசிரியப் பணியைத் தொடங்கி, பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் அழைப்பை ஏற்று திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராய், பின் நீண்ட நாட்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் உப அதிபராய், இராமநாதன் கல்லூரி அதிபராய் தன் கல்வி நிலையைப் பயனுளதாக ஆக்கியதோடல்லாமல், மாணவர் அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரியவர் ஆயினர். திருவளர் செல்வர் சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருச்சிற்றம்பலத்தை 1963ஆம் ஆண்டு மணந்ததன் மூலம் மங்கையின் வாழ்வில் நிறைவும், சௌபாக்கியமும், பேரன்பும் ஒருங்கிணைந்து பலர் போற்றும் பண்புடைய இல்வாழ்வானது. திரு மிகவும் உயர்ந்த, நற்பண்புகள் நிறைந்த முழுமையான மனிதர்.

இவர் வாழ்வின் இன்னொரு பக்கம், தொண்டுள்ளம், சாதாரணமாகப் பேசும் பொழுது கூட இவர் நாவிற் புரளும் செந்தமிழ், முகவிலாசம், திருக்கோவில்களைப் புனரமைப்பதில் காட்டிய ஆர்வம், (யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் கோவில்) இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத் தலைவி, சைவமங்கையர் சபைக் (லேடி இராமநாதனால் தொடக்கப் பெற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியதரிசியாய் இவர் எம் கல்லூரி வளர்ச்சியில் எடுத்த அக்கறை, யாழ். பல்கலைக்கழக செனட் சபை ஒரே ஒரு பெண் உறுப்பினர் என இவர் சமுதாயப் பணியின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். கந்த புராணத்தில் ஈடுபாடும், பெரிய புராணத்தைத் துறை போகக் கற்றும் இவர் மேடைப் பேச்சுகளில் விரித்தும் ஆழமான சிந்தனைகளை முன் வைத்தும் தன் ஆராய்ச்சித் திறனை வெளிப்படுத்தினார். சேலம் இந்து மாநாட்டில் பங்கு பற்றியது இவரது மனம் நிறைந்த நிகழ்வு. கர்நாடக இசை வல்லுனர் சேலம் சகோதரிகள் இவரது நெருங்கிய நண்பர்கள். இப்படியொரு பெருமை மிகு ஆளுமை, கல்வி மேம்பாடு, சிந்தனைச் சிறப்பு மிக்க மங்கையைப் பலரும் அறிவர்.

எம் நீண்ட கால நட்பைப் பயனுறு இனிமை செய்த மங்கையின் இன்னொரு பக்கம் என் கணவரையும், என்னையும் மிக மிக உயர்ந்த மதிப்பை இவர் மேல் உண்டாக்கியது. இவர் தன் கணவரை அவர் பக்க வாதம் வந்து நோயுற்ற நிலையில் கண்ணுக்குள் வைத்து இமைபோல் காத்த தாய்மையின் மேலான உளப் பண்பாடு. நல்லறமாக அமைந்த இவர்கள் இல்லறம் பண்பும் பயனுமுடையது நீணட காலமாக. பின் 16 ஆண்டுகள் கணவருக்கு வந்த பக்க வாதம் இவரைப் பெரிதும் துயருற வைத்ததே அன்றி இவர் தன் வாழ்வைத் தொலைத்து விட்டு நிற்கவில்லை. இருவருமாய் திருத்தல வழிபாடு, கங்கா ஸ்நானம், கோவிற் திருப்ணிகளென பயனுற வாழ்ந்து அன்னியோன்யம் கண்டு இன்புற்றனர்.

மங்களகரமான இவர் வாழ்விற்கு முடிவு என்பது இல்லை – எம் நினைவுகளில் என்றும் வாழ்வர்.

-----

நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு –குறள் 336

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு –குறள் 339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்



வேதசிவாகம விற்பன்னரும் கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோவிலிற் பிரதம சிவாசாரியாராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்தவருமான **சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்** 10-01-2006 ஆம் திகதி இம்மண்ணுல வாழ்வைத் துறந்தார்.

சுன்னாகம் - மைலணியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர். ஆலயங்களில் இடம் பெறும் ஆகமக் கிரியைகளையும் முறை தவறாது செய்வதிலும் செய்விப்பதிலும் ஆர்வமும் ஆற்றலும் அநுபவமும் நிறைந்த சிவாசாரியார் பரம்பரையைச் சேர்ந்தவர். பிரம்மஸ்ரீ சின்னையர்-விசாலாட்சி தம்பதியின் ஏகபுத்திரன். இவருடைய இருபதாவது வயதில் 1946ஆம் ஆண்டில் ஆச்சாரியாபிஷேகம் நிகழ்ந்தது. 1949ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்திற் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசுவரர் கோவிலில் இவருடைய சிவப்பணி ஆரம்பமானது. தேர்ந்து தெளிந்த அறிவு, 'செய்வன திருந்தச் செய்' என்பதில் நம்பிக்கையும் உறுதியும் நிறைந்த மனோபாவம் போன்றவை மிகுந்துள்ள அர்ச்சகரின் மகிமையால், கல், சிவனாக ஆகின்றது எனச் சொல்லப்படுவதுண்டு. இத்தகைய சிறப்பு மிக்க சிவாசாரியாராக இவர் உயர்ந்தார். சோதிடக் கலையில் இவருக்கிருந்த புலமை, இவருடைய சமயப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தது. தமிழ் ஆசிரியர் தராதரப் பரீட்சையிற் சித்தியடைந்த இவருடைய தமிழ் அறிவும் சிலாக்கிக்கத் தக்கது. கோவிற் கிரியைகள், முகூர்த்த நிர்ணயம், சமய தத்துவங்கள்-சம்பந்தமான சந்தேகங்கள், பிரச்சினைகள் தோன்றிய வேளைகளில் எல்லாம் இவர் வழங்கிய தீர்ப்புகள், அளித்த விளக்கங்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. "நாட்டு மக்கள் பிழை செய்தால், அந்தப் பாவம் அரசனைச் சாரும்; அரசன் பிழை செய்தால், அந்தப் பாவம் புரோகிதனைச் சேரும்" என்று அடிக்கடி ஞாபக மூட்டுவது இவருடைய வழக்கம். பிறப்பால் மட்டும் பிராமணனாக இருப்பதில் பிரயோசனமில்லை; அறிவிலும், ஒழுக்கத்திலும் அவன் சிறந்து விளங்க வேண்டும். இவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையால் சமூகத்தைச் செம்மையான முறையில் வழி நடத்திச் செல்ல வேண்டும் என்பதை மனதில் இருத்தி அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கத்தை நிறுவிச் சமஸ்கிருத கல்வி வளர்ச்சியிலும், சமயக் கிரியைகளை, ஏன்?, எப்போது?, எப்படி? செய்ய வேண்டும் என்பனவற்றை விளக்கிப் பயிற்சி அளிப்பதிலும் இவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். கொழும்பு விவேகானந்தசபை, அகில இலங்கை இந்து மாமன்றம், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை போன்ற பல அமைப்புக்களின் காப்பாளராக–விசேட ஆலோசகராக இவர் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. சிவபூஜா துரந்தரரான குருக்கள் அவர்களுக்குப் பல்வேறு அமைப்புக்களால் மனமுவந்து வழங்கப் பெற்ற கௌரவப் பட்டங்களுள் பிரதிஷ்டா பூஷணம், சிவாகமஞானபானு, கிரியாகலாப முக்தாமணி போன்றவை சிறப்பு மிக்கவை.

தன்னுடைய வருவாயின் கணிசமான பகுதியைத் தென்னிந்தியத் திருத்தல யாத்திரைகளை அடிக்கடி மேற்கொள்வதற்குப் பயன்படுத்தினார். அறிவுக்கடல்களான சில சிவாச்சாரியார்களைச் சந்தித்துத் தன் அறிவை விருத்தி செய்வதற்கும் தல யாத்திரைகளைப் பயன்படுத்தினார்.

பல்வேறு சிறப்புக்களால் ஓர்–உதாரண சிவாசாரியாரராகத் திகழ்ந்த சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களின் மறைவு சைவ உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்பதற்கு ஐயமில்லை.

–சிற்பி

(நன்றி: அருள்ஒளி (மலர் 42))

**குறிப்பு:-**

சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் இறைபதம் அடைந்த பொழுது, நாங்கள் அவுஸ்திரேலியாவில் இருந்தமையால், செய்தி கிடைக்கவில்லை. உடனடியாக எங்கள் அஞ்சலியைச் செலுத்த முடியவில்லை. குருக்கள் ஐயா அவர்கள் அன்புநெறியின் பணியைப் பாராட்டி, மன்றம் 2001 இல் வெளியிட்ட வைத்தீசுவரர் மலருக்கு சிறந்த கட்டுரை ஒன்றைத் தந்து வாழ்த்தியவர். கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் 57 வருடங்களுக்கு மேலாக பிரதம சிவாச்சாரியாராக இருந்து அரும்பணி ஆற்றியவர். அன்னாரின் ஆன்மா சிவனார் குஞ்சிதபாதம் பற்றிப் பேரின்பப் பெருவாழ்வு எய்தவும், அவரின் குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள் மன அமைதி பெறவும் சிவபெருமான் திருவருளை வேண்டி வணங்குகிறோம்.

– ஆசிரியர் தி.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர் பகுதி**
சென்ற இதழ் தொடர்ச்சி........

## மாணவருக்கு

(திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமி)

### மாதா

"அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்" என்பார் அறிஞர் மேதை ஔவைப் பிராட்டியார்.

"தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை."

"தாய் சொல் துறந்தால் வாசக மில்லை."

என்றுரைத்தவரும் அவரே.

தாய் தன் பிள்ளைகளுக்காகத் தன்னையே சர்வ பரித்தியாகம் செய்வாள்.

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்தைத் தாயுண் டாங்கு"

என்று குமரகுருபரர் கூறுவார். பட்டினத்துப் பெருமானோ,

"முந்தித் தவங் கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்திபக லாய்ச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார்."

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று
......

எனறெல்லாம் பாடுவார்.

தன் பிள்ளைகள் நன்கு வளர வேண்டும், கற்றுத் தெளிய வேண்டும், எல்லா நலன்களும் எய்த வேண்டும், அதனால் பேரும் புகழும் பெற்று இன்புற்று வாழ வேண்டும் என்னும் ஆர்வம், அன்னைக்கு உள்ளதைப் போன்று அகிலத்தில் வேறு எவர்க்கும் இல்லை.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். - திருவள்ளுவர்

மேலும் இந்த உலகில் முதலில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவள் மாதாதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரை விடப் பத்து மடங்கு அதிகம் ஆசார்யன் (உயிர் மேற்கதியடைய தீட்சை தரும் சமய குருநாதர் ஆசார்யன்). ஆசார்யனை விட நூறு மடங்கு அதிகம் தந்தை. தந்தையை விட ஆயிரம் மடங்கு அதிக மகத்துவமும் பெருமையும் உடையவள் தாய்.

இணையில்லாத இன்ப அன்புக்கு உரியவள் மாதாவாகும். அவளின் பெருமையை இராமலிங்க வள்ளலார் பின்வருமாறு பாடுகின்றார்.

"வன்மையறப் பத்து மாதஞ் சுமந்துநமை மண்ணுலகில்
நன்மை தரப்பெற்ற நற்றாய்காண்
மூளும் பெருங்குற்றம் முன்னி மேன்மேற் செயினும்
நாளும் பொறுத்தருளும் நற்றாய்காண் – மூளுகின்ற
வன்னெறியிற் சென்றாலும் வாவென்றழைத்து நமை
நன்னெறியிற் சேர்க்கின்ற நற்றாய்காண்
காலம் அறிந்தே கனிவோடு நல்லருட்பால்
ஞால மிசையளிக்கும் நற்றாய்காண்
வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கை யுந்துயரும்
நம்பிணியும் தீர்த்தருளும் நற்றாய்காண்
வாடியழு தால்எம் வருத்தந் தரியாது
நாடி எடுத்தணைக்கும் நற்றாய்காண்."

இத்தகைய தாயின் மனம் நோவாது அவர்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றி நடந்து கொள்வதுதான் முதல் முக்கியமான கடமையாகும். மாதாவின் மனம் நோகும் எதனையும் மக்கள் செய்யலாகாது.

"தாயை அழவிடாதீர்கள் ஏனெனில், அவள்
கண்ணீரை ஆண்டவன் எண்ணிக் கொண்டிருக்கிறான்."

என்று ஓர் அறிஞர் கூறியிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

தொடரும்

எழு பிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் –குறள் 62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருகலில் புரிந்த மாயம்

(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்)

நமது திருஞானசம்பந்தப் பெருந்தகையார் திருச்செங்காட்டங் குடியினின்றும் திருமருகலை அடைந்து இறைவனை வணங்கி அங்கிருக்கும் நாளில், ஒரு வணிகன் வழிப்போக்கனாய் ஒரு கன்னிகையை அழைத்துக் கொண்டு வந்து கோயிலின் பக்கலில் ஒரு மடத்திலே தங்கியிருந்தான். இரவில் கண்துயிலும்போது பாம்பு தீண்டி இறந்தான். அக்கன்னி அவனைப் பாம்பு தீண்டியும் தான் தீண்டாமல் இருந்து வருந்தி அழுது புரண்டு அரற்றினாள். பற்பல முயற்சிகள் செய்தும் விடம் தீர்ந்து அவன் பிழைத்தானில்லை. அதனைக் கண்ட அப்பெண் பெரிதும் வருந்தி "விடியற் காலையில் அன்னையையும் அத்தனையும் விட்டுப் பிரிந்து உன்னைத் துணை பற்றித் தொடர்ந்து வந்தேன். நீ பாம்பின் வாய் பட்டு மாண்டனை என்னைத் தமியளாக்கிச் சென்றனை என் துன்பத்தை அகற்றி என்னைக் காக்க வல்லவர் யார்? என் துன்பத் தீயை அணைக்கும் கருணை மேகத்தை எங்கு சென்று தேடுவேன், வணிக குல மணியே! யானும் இறந்து உன்னுடன் வருவேன்" என்று வாய்விட்டுப் புலம்பித் திருக்கோயில் திருவாயில் திசையை நோக்கி "அடியவர்களாய அமரருய்ய ஆலாலமுண்ட நீலகண்ட நின்மலனே! மாலயன் காணாத மணிவிளக்கே! வெந்து சாம்பரான மதனனை இரதிதேவி வேண்ட உண்டாக்குவித்து உதவிய கருணைக் குன்றமே! பாலனுக்காகக் காலனை உதைத்த பரம்பரனே! அருட் கொண்டலே! இந்த விடக்கொடுமை நீங்குமாறும் ஏழையேன் உய்யுமாறும் இன்னருள் புரிவாய்! மருகற் பெருமானே! மாசிலாமணியே!" என்று இறைவனைக் கூவி முறையிட்டாள். இத்துதியுடன் கூடிய அழுகுரல் காலையில் கண்ணுதல் வணங்க வருகின்ற கவுணியர்கோன் (சம்பந்தர்) திருச்செவியில் வீழ்ந்தது. அக்கருணைக் கடலின் உள்ளம் உருகியது. ஓடினார். கண்டார் கழிபெருங் கருணை வள்ளலாகிய அவர் உள்ளத்தில் பெருகிய அருள் வெள்ளத்தினால் அம்மடங்கையைக் குளிர்வித்தார். "அம்மா அஞ்சாதே நினக்குற்ற துயர் யாது? கூறுக." என்றார்.

அம்மடவரல் கண்ணருவி பாய, அப்பரம குருமூர்த்தியின் பாதபங்கயத்தில் பணிந்து கைகுவித்து நின்று "அண்ணலே அடிமையேன் வைப்பூரில் வாழும் தமன் என்னும் வணிகனுடைய மகள். இங்கு இறந்த இவர் என் பிதாவினுடைய மருகர். என்னுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய என் மூத்தோர் ஆறு பெண்களையும் இவருக்குத் தருவதாகச் சொல்லி இவரை ஏமாற்றி வேறிடத்தில் பொருள் நிரம்பப் பெற்றுக் கொடுத்து விட்டனர். என்னையும் இவருக்கென்றே சொல்லி வைத்திருந்து பிறகு ஒரு தனவந்தனுக்குத் தர முயன்றனர். அதனால், இவர் தளர்ந்து உள்ளம் உடைந்து போனார். இவருடைய ஆறாத் துயரைக் கண்டு இவருடன் யான் பெற்றோரை விட்டுப் போந்தேன். இவர் ஈண்டு அரவந் தீண்டி மாண்டார். கவிழும் கலத்துள் நின்றவர்போல் மயங்கியழும் இப்பாவியைக் காக்குங் கடவுளாகத் தேவீர் வந்தருளினீர்" என்று தன் துன்பத்தையும் வரலாற்றையும் சொன்னாள். அதனைக் கேட்ட ஆளுடைய பிள்ளையார் அருள் சுரந்து

"சடையா யெனுமால் சரண் நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே."

என்ற "அமிர்த கவித்தொடை" யைப் பாடி விடந்தீர்த்தருளினார். உடனே வணிகன் உயிர் பெற்றெழுந்தான்; எழுந்து சம்பந்தப் பெருமான் சரண் மலரில் வீழ்ந்தான். அம்மடமங்கையும் வீழ்ந்தாள். இன்பக் கடலில் ஆழ்ந்தாள். அவ்விருவருக்கும் மணம் புரிவித்து இல்வாழ்வு செய்யும் நல்வாழ்வு தந்தருளினார்.

-----

**மன்றத்தில் நிகழ்ந்தவை**

## உமாபதி சிவாசாரியார் குருபூசை

உமாபதி சிவாசாரியார் குருபூசை 12-05-2006 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் நடைபெற்று உமாபதி சிவாசாரியாருக்கு சிறப்புப் பூசையும் நடைபெற்றது. பின்னர் அன்புநெறியில் வெளியான உமாபதி சிவாசாரியார் பற்றிய கட்டுரையை மன்ற மேல் வகுப்பு மாணவர்கள் வாசித்தனர். பிரசாதம் வழங்கலுடன் குருபூசை இனிதே நிறைவுற்றது.

## சேக்கிழார் சுவாமிகள் குருபூசை

சேக்கிழார் சுவாமிகள் குருபூசை 02-06-2006 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் நடைபெற்றது. தொடர்ந்து சேக்கிழார் போற்றிப் பாடல்களும் பாடப்பெற்று மன்ற மாணவர்களது பேச்சுகளும் இடம் பெற்றன. பிரசாதம் வழங்கலுடன் குருபூசை இனிதே நிறைவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்த மன்றம், கனடா

Saiva Sidhdhantha Manram, Canada

1008-50 Elm Dr. E., Mississauga, ON L5A 3X2 Canada

(905) 566-4822

பெறுநர் To:

______________________

______________________

______________________


புதிய பல் மருத்துவமனை

குடும்ப பல் மருத்துவர்



**Dr. Vanathy Jeevakumar**


**டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்**

***Dundas Dental Centre***

29C Dundas Street East

Mississauga, Ont., L5A 1V9

(Hurontario/Dundas)




**சகல பல் மருத்துவ சேவைகள்**

(Including Braces Implants)

**வாரத்தில் ஏழு நாட்கள்**

Phone **(905) 281-0273**

Fax: (905) 281-8792

Since 1965

**USC**

**EDUCATION SAVINGS PLANS INC.**

**THAYAPARAN (TAI) ARUMUGAM**

Sales Representative

Direct: (905) 426-6624

Office: (905) 426-7713

Cell: (416) 889-3088

Toll Free: 1-877-789-RESP

Direct Fax: (905) 426-5100

E-mail: THAYAA@acol.com

Executive Enrolment Representative

59 Batt Crescent

Ajax, Ontario

L1T 4L8

Head Office: 1-800-363-RESP (7377) www.usc.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org